## தஞ்சையில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம்! சென்னையில் சுதந்திர தின அருங்காட்சியகம்!

# கிராமப்புறக் கலைகளை அரசு மீட்டெடுத்து ஊக்கப்படுத்தி வருகிறது!

## சட்டப்பேரவையில் கலை மற்றும் பண்பாடு – அருங்காட்சியகங்கள் துறை மானியக் கோரிக்கையில்–அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பதிலுரை!

**சென்னை, ஏப்.20–**

**சட்டப்பேரவையில் கலை மற்றும் பண்பாடு – அருங்காட்சியகங்கள் துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பதிலுரையாற்றுகையில், கலை பண்பாட்டுத்துறை இன்றைக்கு கிராமப்புற கலைகளையெல்லாம் அரசு மீட்டெடுத்து ஊக்கப்படுத்தி வருகிறது என்று பெருமையுடன் குறிப்பிட்டார்.**

**சட்டப்பேரவையில் கலை மற்றும் பண்பாடு அருங்காட்சியகங்கள் துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பதிலுரை வருமாறு:–**

**மு.பெ. சாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழை முத்தமிழ் என போற்றி வளர்த்த இனம் தமிழ் இனம். திராவிடப் பண்பாடு என்பதே தமிழ்நாட்டின் மொழி, இயல், இசை, இலக்கியம், கலை, மக்கள் பண்பாடு என்பதுதான். அதனால் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழக மக்களைப் பற்றி பெருமையாகச் சொன்னார்கள். சுப நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, துக்க நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி நம்முடைய தமிழர்கள் இசையைப் பயன்படுத்தினார்கள் என்று சுருக்கமாகச் சொன்னார்கள்.

### தமிழ்நாட்டையே கலைக் கூடமாக மாற்றிய கலைஞர்!

திராவிடத் தென்றலாய், பேரறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பியாய், தமிழ்நாட்டைச் செதுக்கிய சிற்பியாய் திகழ்ந்தவர் ஐயா கலைஞர் அவர்கள். அவரை தமிழ்நாட்டு மக்கள் 'முத்தமிழறிஞர் கலைஞர்' என்றே பெருமை பொங்க அழைப்பார்கள். ஒப்பிட முடியாத தமது எழுத்துத் திறமையால் இயற்றமிழ் வளர்த்தார்; இசைவாணர்களைப் போற்றி பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கி, காலமெல்லாம் உதவினார். வள்ளுவருக்கு கோயில் கட்டியதில் தொடங்கி, வள்ளுவர் கோட்டம், குமரியில் வான் உயர வள்ளுவர் சிலை, பூம்புகார் கோட்டம் என இப்படி தமிழ்நாட்டையே கலைக் கூடமாக மாற்றிய பெருமை ஐயா கலைஞரையே சாரும்.

முத்தமிழறிஞர் கலைஞர் காட்டிய பாதையில் தாமும் நடந்து, தமிழ் மக்களுக்கு திட்டங்களை வழங்குவதில் இந்திய நாட்டில் நம்பர் ஒன் முதல்வராக, தமிழ்நாட்டு மக்களின் தனிநபர் வருமானத்தை உயர்த்தி, தனது நிர்வாகத் திறமையால் மாநிலத்தின் வளர்ச்சி விகிதத்தை 9.69 சதவிகிதமாக உயர்த்தி மாநிலத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்து செல்வது மட்டுமல்லாமல், தமிழ் மக்களின் கலை பண்பாட்டை வளர்ப்பதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவராய், தமிழ்நாட்டின் வழிகாட்டியாகவும், இந்தியாவின் திசைகாட்டியாகவும் விளங்குகிறார் முதலமைச்சர் அவர்கள்.

## கோவை செம்மொழிப் பூங்காவில் கடையேழு வள்ளல்களின் 'கலைக்கோட்டம்'

மாநில உரிமைகளைப் பெறப் போராடும் போர் வீரராய், உச்சநீதிமன்றம் சென்று உரிமையின் உச்சத்தை எட்டிப்பிடித்த வெற்றி வீரராய் திகழ்ந்து, தமிழ்நாட்டில் கலை வளர்த்து, மொழி வளர்த்து, பண்பாட்டைப் பேணிக்காத்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியினை உலகமே பாராட்ட செய்து கொண்டிருக்கும், உலகமே பாராட்டுகிற வகையில் ஆட்சி செய்து கொண்டிருக்கும் முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

திராவிடம், திராவிட இனம், திராவிடப் பெருமை என்ற கொள்கை தலைமுறை தலைமுறையாகத் தழைத்து வளர்ந்து நிலைபெற்று திகழ வேண்டும் என்று தம் இளம்வயதிலேயே நெஞ்சுறுதியோடு முதலமைச்சர் வழிகாட்டுதலில் தாமும் நடைபயின்று, எங்களுக்கும் ஊக்கமூட்டும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய வெற்றிக்கு வாக்களித்த காங்கேயம் தொகுதி வாக்காளப் பெருமக்களையும், தேர்தலிலே எனது வெற்றிக்கு பணியாற்றிய கழகத் தோழர்கள், கூட்டணிக் கட்சி தோழர்கள், எனது நண்பர்கள், இந்த நேரத்திலே வணங்குகிறேன். திருப்பூர் மாவட்டம் மற்றும் நீலகிரி மாவட்ட மக்களையும், அதேபோல பத்திரிக்கை மற்றும் ஊடக நண்பர்களையும், என்னை ஈன்றெடுத்த மறைந்த என் தாய், தந்தையரையும் வணங்குகிறேன். இரண்டாவது முறையாக கலை பண்பாடு மற்றும் அருங்காட்சியகங்கள் துறை மானியக் கோரிக்கை தாக்கல் செய்ய வாய்ப்பளித்தமைக்கு, முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் வாழ்ந்த கடையெழு வள்ளல்கள் அதியமான், ஆய், பாரி, காரி, ஓரி, பேகன், நல்லி ஆகிய கடையேழு வள்ளல்களின் நினைவாக கோவை செம்மொழி பூங்காவில் "கடையேழு வள்ளல்களின் கலைக்கோட்டம் அமைக்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள், அதை வரும் நிதியாண்டில் செயல்படுத்த இருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு நடைபெற்ற நிகழ்வை இம்மாமன்றத்தில் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். புதுடெல்லியிலிருந்து வெளிவரும் "Outlook ஆங்கில இதழும் "ICARE என்ற அமைப்பும் இணைந்து ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் உள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியலை பிரிவு வாரியாக வெளியிட்டு வருகிறது.

கடந்த ஆண்டு முதன் முறையாக இசைப் பிரிவில் நாட்டில் உள்ள இசைப் பல்கலைக் கழகங்களையும், அவற்றின் செயல்பாடுகளையும் விரிவாக ஆய்வுச் செய்து தரவரிசைப் பட்டியலை வெளியிட்டது. அப்பட்டியலில்தான் நம்முடைய "தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெ. இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் அடங்கும். அந்த வகையிலே 2024 ஆம் ஆண்டுக்கான

## சென்னை சங்கமம் — நம்ம ஊர் திருவிழாக்கள்!

தரவரிசைப் பட்டியலில் நாட்டிலேயே "சிறந்த இசைப் பல்கலைக்கழகமாக இன்றைக்கு தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. இந்த பல்கலைக்கழகத்தில்தான் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை ஏற்கனவே வேந்தராக கொண்டு செயல்பட்டு வருகிற பல்கலைக்கழகம் ஆகும். கடந்தாண்டு இப்பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு நிகழ்ச்சியில் முதல்வர் அவர்கள் வேந்தர் என்ற முறையில் கலந்து கொண்டு ஏறத்தாழ 3,448 மாணாக்கர்களுக்கு அன்றைக்கு பட்டங்களை வழங்கி, நிகழ்ச்சியை துவக்கி வைத்தார் என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு குறிப்பிடுகின்றேன்.

### சென்னை 'சங்கமம்' நிகழ்ச்சி!

தற்போது உச்சநீதிமன்ற தீர்ப்பிற்கு பிறகு எங்களின் பல்கலைக்கழக வேந்தரே, தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கும் வேந்தராக பொறுப்பேற்றிருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2011–2021–ஆம் ஆண்டு வரையிலான அ.தி.மு.க–வின் 10 ஆண்டு ஆட்சிக் காலத்தில் கைவிடப்பட்ட "சென்னை சங்கமம்" நிகழ்ச்சி இன்றைக்கு சிறப்பாக முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின் படி நடைபெற்று வருகிறது. முதலமைச்சர் அவர்களின் ஆணையை ஏற்று, இன்றைக்கு எங்களுடைய துறை சிறப்பாக அதை நடத்தி வருகிறது. அந்த வகையிலே "சென்னை சங்கமம் – நம்ம ஊரு திரு



விழா" என்கிற நிகழ்ச்சி எழுச்சியுடனும், மகிழ்ச்சியுடனும் நடைபெற்று வருகிறது. அந்த வகையிலே இவ்விழாவின் சிறப்பே முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் தவறாமல் கலந்து கொண்டு முரசு இசைத்து நிகழ்ச்சியை துவக்கி வைப்பது தான் இந்த நேரத்தில் பெருமையாக இருக்கிறது. இந்தாண்டும் சென்னையில் நடைபெற்ற "சென்னை சங்கமம்" நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். அதன் நீட்சியாக சென்னையில் 18 இடங்களிலும், அதேபோல காஞ்சிபுரம், வேலூர், சேலம், கோவை, மதுரை, நெல்லை, திருச்சி, தஞ்சை ஆகிய எட்டு மாவட்டங்களில் அந்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. அந்த வகையில் ஏறத்தாழ 2000–க்கும் மேற்பட்ட கலைஞர்கள் அதிலே கலந்துக்கொண்டார்கள். அதற்காக முதலமைச்சர் அவர்கள் ஏறத்தாழ 10 கோடி ரூபாய் நிதியை வழங்கினார்கள் என்பதை இந்த நேரத்திலே நன்றியோடு நினைவுக் கூறுகின்றேன்.

இன்றைக்கு கலை பண்பாட்டுத் துறையின் சார்பில், இன்றைக்கு பல்வேறு கல்லூரிகள் செயல்பட்டு வருகிறது. அந்த வகையிலேதான் 7 மண்டலங்களாக கலை பண்பாட்டு மையங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது. காஞ்சிபுரம், சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர். தமிழ்நாடு அரசு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் ராஜா அண்ணாமலைபுரம், சென்னையில் செயல்பட்டு வருகிறது. அதேபோல அரசு கவின்கலை கல்லூரிகள் சென்னை, கும்பகோணம். கடந்த ஆண்டு மதுரையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் வரும் கல்வி ஆண்டில் அது செயல்பட துவங்கும்.

### தமிழ்நாட்டில் 18 இசைப் பள்ளிகள்!

அரசு கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை கல்லூரி மாமல்லாபுரத்தில் செயல்பட்டு வருகிறது. அரசு இசைக் கல்லூரிகள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருவையாறு ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகிறது. அரசு நிதியுதவி பெறும் கல்லூரியாக கலைகாவிரி நுண்கலைக் கல்லூரி திருச்சியில் செயல்பட்டு வருகிறது. அதேபோல 18 இசைப்பள்ளிகள் இன்றைக்கு பல்வேறு பகுதிகளில் செயல்பட்டு வருகிறது.

அதே நேரத்தில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாட்டினுடைய நாட்டுப்புறக் கலைகள் நல வாரியம் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றங்கள் ஏறத்தாழ 60 இடங்களிலே உயிர்ப்புடன் செயலாற்றி வருகிறது. அந்த வகையில் இன்றைக்கு கலைப்பண்பாட்டுத் துறை இன்றைக்கு கிராமப்புற கலைகளையெல்லாம் மீட்டெடுத்து, முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி அந்தக் கலைகளையெல்லாம் ஊக்கப்படுத்தி வருகிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அருங்காட்சியகம்!

அதேபோல அருங்காட்சியகம் துறையினுடைய பதிலுரைக்கு நான் வருகிறேன். 1851–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தியாவின் இரண்டாவது பழமையான அருங்காட்சியகமான சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியக வளாகத்தில் ரூபாய் 40 கோடியில் "ஐம்பொன் மற்றும் செப்புத் திருமேனிகளின் காட்சிக்கூடம்" அமைக்க முதல்வர் அவர்கள் இன்றைக்கு நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கியிருகிறார்கள், அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாபெரும் சோழர் அருங்காட்சியகம்

உலகாண்ட சோழர்களின் பங்களிப்பைப் போற்றும் வகையில் தஞ்சாவூரில் "மாபெரும் சோழர் அருங்காட்சியகம்" அமைக்க விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கட்டுமானப் பணிகளுக்காக ரூபாய் 54 கோடியில் நடப்பு நிதியாண்டில் அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது.

### சுதந்திர தின அருங்காட்சியகம்!

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு குறித்து, எதிர்கால இளம் சமுதாயம் அறிந்து கொள்ளும் வகையில் சென்னையில் "சுதந்திர தின அருங்காட்சியகம் ரூபாய் 20 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட இருக்கிறது.

சென்னை அரசு அருங்காட்சியகம்– சென்னை அரசு அருங்காட்சியகத்தின் பார்வை நேரம் எழும்பூரில் உள்ள அருங்காட்சியகம், பார்வை நேரம் காலை 10–00 மணி முதல் மாலை 6–30 மணி வரை என்று மாற்றிய காரணத்தினால், அருங்காட்சியக பார்வையாளர்கள் வருகை எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. அதனுடைய வருவாயும் ஏறத்தாழ 30% கணிசமாக உயர்ந்திருக்கிறது.

நடைபெற்றுவரும் பணிகள்– சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்திலுள்ள வளர் கலைக்கூடம், மானுடவியல்கூடம், சிறுவர் அருங்காட்சியகம் மற்றும் பாந்தியன் கட்டடங்களை சீரமைக்கும் பணிகள் ரூபாய் 10 கோடி மதிப்பில் நடைபெறுகின்றன. சில பணிகள் நடைபெற்று முடிந்திருக்கின்றன.

மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகத்தை மேம்படுத்தும் பணிக்காக ஏறத்தாழ ரூ.6 கோடி முதலமைச்சர் அவர்களால் அனுமதிக்கப்பட்டது. காஞ்சிபுரம் அரசு அருங்காட்சியகத்தினை வேறு இடத்திற்கு மாற்றி புதுப்பிக்கும் பணிகள் ஏறத்தாழ 2 கோடி ரூபாயில் நடைபெறுகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அரசு அருங்காட்சியகம் ரூபாய் 5 கோடியே 60 இலட்சம் மதிப்பிலும், அனைத்து அருங்காட்சியகங்களிலும் உள்ள சேகரிப்புகளை பட்டியலிடுவதற்கு அருங்காட்சியக தகவல் அமைப்பு ரூபாய் 1 கோடியே 83 இலட்சம் மதிப்பிலும் நடைபெற்று வருகிறது.

வேலூர் மாவட்ட அரசு அருங்காட்சியகம் நவீன வசதிகளுடன்கூடிய புதிய காட்சிக் கூடங்களை விரிவாக்கும் பணிகள் ரூ.2 கோடி மதிப்பிலும், நாகப்பட்டினம் அரசு அருங்காட்சியகம் நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய புதிய காட்சிக் கூடங்களை விரிவாக்கும் பணிகள் ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பிலும் நிதிகள் ஒதுக்கப்பட்டு, பணிகள் நடைபெற இருக்கின்றன.

கடலூர் மாவட்ட அரசு அருங்காட்சியக பாரம்பரிய கட்டடத்தில் நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய காட்சிக் கூடங்களை விரிவாக்கும் பணிகள் ரூபாய் 1 கோடி மதிப்பிலும் நடைபெற்றுவருகின்றன. சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் உள்ள சிறுவர் அருங்காட்சியக பழைய கட்டடத்தினை அகற்றி, பாரம்பரிய சுற்றுச்சூழலுக்கு ஏற்றவாறு புதிய கட்டடம் கட்டி, பன்னாட்டு தரத்தில் அமைப்பதற்கான திட்ட அறிக்கை தயார் செய்யப்படும். இராமநாதபுரம் அரசு அருங்காட்சியகத்திற்கான புதிய கட்டடம் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

கலை மற்றும் பண்பாடு அருங்காட்சியகங்கள் துறையின் மானியக் கோரிக்கை எண் 29 பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள், ஏற்கெனவே விளக்கமாக அச்சடிக்கப்பட்டு, இன்றைக்கு மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதையெல்லாம் நிச்சயமாக மாமன்ற உறுப்பினர்கள் படித்திருப்பார்கள். இன்றைக்கு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் பேரில் ஏறத்தாழ 19 அறிவிப்புகளை, கலை மற்றும் பண்பாட்டில் 10 அறிவிப்புகளையும், அருங்காட்சியகங்கள் துறை மூலமாக 9 அறிவிப்புகளையும் வெளியிட விரும்புகிறேன்.

### அறிவிப்புகள்

### கலை பண்பாட்டுத் துறை!

1. கலை பண்பாட்டுத் துறையின் வாயிலாக நிகழ்த்துக்கலை மற்றும் நுண்கலைத் திட்டங்கள் மேலும் விரிவாக செயல்படுத்தப் படும். அனைத்து மாவட்டங்களிலும் தமிழிசை விழாக்கள் நடத்தப்படும். இதற்கென ஆண்டொன்றுக்கு கூடுதலாக ரூ.2.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## அனைத்து மாவட்டங்களிலும் தமிழிசை விழாக்கள்!

2. கும்பகோணம், அரசு கவின் கலைக் கல்லூரியில் புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்படும். அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, அரசு கவின் கலைக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களின் நலனுக்காக திட்டங்கள் செயல்படுத்தப்படும். இத்திட்டங்களுக்காக ரூ.67.70 இலட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப் படும்.

3. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் இயல், இசை, நாட்டியம், நாடகம் மற்றும் கிராமியக் கலைகளில் சிறந்த சாதனைப் படைத்த கலைஞர் ஒருவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதும், ரூ.10.00 இலட்சம் பரிசுத்தொகையும் வழங்கப்படும்.

4. சென்னை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் புதிய இளங்கலை பட்டப்படிப்புகள் தொடங்கப்படும். தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளில் வல்லுநர்கள்மூலம் சிறப்பு வகுப்புகள் மேற்கொள்ளப்படும். மேலும், தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் கல்வி உதவித்தொகை உயர்த்தி வழங்கப்படும். இத்திட்டங்களை செயல்படுத்திட கூடுதலாக ரூ.1.09 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப் படும்.

5. இளைஞர்களுக்கு நடிப்புத் திறனை மேம்படுத்தும் வகையில், மதுரை, அரசு கவின் கலைக் கல்லூரியில் நாடகப்பிரிவு தொடங்கிட ரூ.24.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

6. ஜவகர் சிறுவர் மன்றங்களில் பணியாற்றும் பகுதிநேர பயிற்றுநர்கள், திட்ட அலுவலர்கள்/ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் தொகுப்பூதியத்தினை உயர்த்தி வழங்கிட கூடுதலாக ரூ.42.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் படும்.

## கிராமியக் கலைஞருக்கு ரூ.10 இலட்சம் பரிசுத் தொகையுடன் வாழ்நாள் சாதனையாளர் விருது!

7. மாமல்லபுரம், அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

8. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் நிருவாகப் பணிகள் மற்றும் கலைப் பணிகளுக்காக தற்போது ஆண்டொன்றுக்கு வழங்கப்பட்டுவரும் அரசின் நல்கைத் தொகை ரூ.3.00 கோடியிலிருந்து ரூ.4.00 கோடியாக உயர்த்தப்படும்.

9. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக வழங்கப்படும் நலிந்த கலைஞர் நிதியுதவி திட்டத்திற்கு விண்ணப்பித்துள்ள தகுதி வாய்ந்த அனைத்து கலைஞர்களுக்கும் நிதியுதவி வழங்கிட கூடுதலாக ரூ.9.00 கோடி நிதி ஒதுக்கப் படும்.

10. தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தின் இணையதளம் மேம்படுத்தப்படும். மேலும், மாணவர்களின் இசைத் திறனை மேம்படுத்த புதிய செயலி உருவாக்கப்படும்.

### அருங்காட்சியகங்கள் துறை!

1. சென்னை அரசு அருங்காட்சியகத்தின் புவியியல், தாவரவியல், விலங்கியல் மற்றும் மானுடவியல் காட்சிக்கூடங்களை மேம்படுத்தி காட்சி அமைத்திட ரூ.4.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. சென்னை அரசு அருங்காட்சியகம் தோற்றுவிக்கப்பட்டு 175 ஆண்டுகள் ஏப்ரல், 2026–ல் நிறைவடைவதை முன்னிட்டு அருங்காட்சியக வளாகத்தினை மேம்படுத்திட ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப் படும்.

3. திருப்பூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் புதிய அரசு அருங்காட்சியகங்கள் அமைக்கப்படும்.

4. சென்னை அரசு அருங்காட்சியகத்தின் கலையரங்கத்திற்கு சிறப்பு ஒலியமைப்பு மற்றும் ஒளியமைப்பு சாதனங்கள் நிறுவிட ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. மதுரை அரசு அருங்காட்சியகக் காட்சிக்கூடங்களின் தரத்தினை உயர்த்தி, தேனி அரசு அருங்காட்சியக வளாகத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

6. கோயம்புத்தூரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் அரசு அருங்காட்சியகத்தினை புதியதாக அமைக்கப்பட்டுவரும் செம்மொழிப் பூங்காவில் உள்ள கட்டடத்திற்கு மாற்றியமைத்திட ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

7. உதகமண்டலம் அரசு அருங்காட்சியகம் அமைந்துள்ள பாரம்பரிய கல் இல்லக் கட்டடத்தை சீரமைத்து, உள்ளரங்கப் பணிகள் மேற்கொள்ள ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

8. சென்னை அரசு அருங்காட்சியகத்திற்கு வருகை தரும் மூத்த பார்வையாளர்கள் வசதிக்காக மின்கலம்மூலம் செயல்படும் இரு வாகனங்களை இயக்குவதற்கு ரூ.12.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் படும்.

9. சென்னை அரசு அருங்காட்சியக வேதியியல் பாதுகாப்பு ஆய்வகத்தை மேம்படுத்தும் வகையில் ஆய்வக சாதனங்களை நிறுவிடவும், அதனை செயல்படுத்திட இரு பணியாளர்களை தற்காலிகமாக பணியமர்த்திடவும் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

துறை மானியக் கோரிக்கைகளை சிறப்பாக இங்கே வாசிப்பதற்கு உதவி செய்த, பல்வேறு திட்டங்களை வழங்குவதற்கு உறுதுணையாக இருந்த அரசின் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உள்ளிட்ட, முதல்வர் அவர்களின் செயலாளர்கள், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் செயலாளர் மரு. க. மணிவாசன், அவர்களுக்கும், கலை பண்பாட்டுத் துறை மற்றும் அருங்காட்சியகங்கள் இயக்குநர் திருமதி கவிதா ராமு அவர்களுக்கும் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகளுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களை வழங்கி இருக்கிறார்கள். அவற்றிற்கெல்லாம் இந்தப் பதிலுரையில் நிச்சயமாக மனநிறைவு அடைந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அவற்றையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கை நிறைவேறுவதற்கு ஆதரவு அளிக்குமாறு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பதிலுரை வழங்கினார்.